# தொகுதி I அநாதி தேவன்

ஆசிரியர் : Ruth B. Greiner ஓவியர் : Francis H. Hertzler

## பாடம் — 1

### தேவனுடைய வாக்குத்தத்தம்

வேதபாடம் : லூக்கா 1 : 26-38 : மத்தேயு 1 : 18-25

பாடத்தின் நோக்கம் : நிறைவேறுவதில்லை என்று தோன்றும் வாக்குத்தத்தங்களையும் கூட அதிக நாளாயினும தேவன் எப்படியும் நிறைவேற்றுவார் என்பதை காண்பித்தல்

மாணவர் அறிய வேண்டியது : தேவன் எங்குமுள்ளவர் அவர் எல்லாவற்றையும் அறிவார் ; அவரால் எல்லாம் முடியும் என்பது

மாணவர் உணர வேண்டியது : அனைத்தையும் அறிந்த தேவன் அவர்கள் பாவத்தையும் அறிகிறார் என்ற உணர்வு

மாணவர் செய்ய வேண்டியது : கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்து, அவரை இரட்சகராய் ஏற்றுக்கொள்ளுதல்.

பாடக் குறிப்பு : (ஆசிரியருக்கும் மாணவருக்கும்)

I ஆதியும் அந்தமும் இல்லாத தேவன்.
II தேவனுடைய வாக்குத் தத்தங்களை எழுதி வைத்த தீர்க்கதரிசிகள்.
III கிறிஸ்துவின் தாயாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மரியாள்.
IV யோசேப்புக்கு வெளிப் படுத்தப்பட்ட கிறிஸ்துவின் பிறப்பு

மனன வசனம்

'தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.' (1 யோவான் 4 : 9).

ஆசிரியருக்கு :

இந்தப் புத்தகத்திலுள்ள 4 பாடங்களையும் கற்பிப்பதில் நீங்கள் மகிழ்ச்சி யடைவீர்கள் இதன் 4 பாடங்களும் தேவகுமாரன் இவ்வுலகிற்கு வந்த சத்தியத் தைப் பற்றியதாகும் தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளப் புத்தகமானதால், ஆசிரியராகிய நமக்கும் நம்மிடம் பயிலும் மாணவருக்கு பின்புமாக அது ஜீவ னுள்ள தாயிருக்கும்.

இந்தப் படங்களிலுள்ள முக்கிய பாத்திரங்களின் இடத்தில் உங்களை நிறுத்திப் பாருங்கள் மரியாளிடத்திலும் யோசேப்பிடத்திலும் வந்ததுபோல உங்களிடத்திலும் ஒரு தேவ தூதன் வந்தால், நிச்சயமாய் நீங்கள் பதட்டம் அடைவீர்கள் இவ்வுணர்ச்சியை மாணவரிடம் அப்படியே பகிர்ந்து கொள்ளுங்கள். இவை உண்மையில் நடந்தவை; இந்தச் சம்பவங்களின் முக்கியப் பாத்திரங்கள் நம்மைப் போன்றவரே ; நடந்தது யாவும் உண்மை யானவையே ஆச்சரியமூட்டும் ஒரு நிகழ்ச்சியை உங்கள் சொந்தமானவர் களிடம் சொல்லும்போது மிக்க உணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் சொல்லு வீர்களல்லவா ! தேவனுடையப் புத்தகத்திலுள்ள இவ்வுண்மைச் சம்பவத்தை அதே விதமான உற்சாகத்துடன் சொல்லுங்கள் !